Makkal Kural
Dated
19/2/19

# SUNDARAM FINANCE

*Enduring values. New age thinking.*

## அறிவிப்பு

இதனால் நிறுவனத்தின் அங்கத்தினர்களுக்கு அறிவிக்கப்படுவது என்னவென்றால், 2013, ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் 110 பிரிவு, 2014 ஆம் ஆண்டு கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதி பிரிவு 22 மற்றும் 2015ம் வருடத்தைய செக்யூரிட்டிஸ் அண்டு எக்சேஞ்சு போர்டு ஆஃப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகளின் கீழ், கீழ்க்கண்ட வர்த்தகங்கள் சம்பந்தமாக அங்கத்தினர்களின் ஒப்புதல், அஞ்சல் வாக்கு மற்றும் மின்னஞ்சல் வாக்கு ஆகியவற்றின் மூலமாக பெற உள்ளது.

"2013 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டம் பிரிவுகள் 42, 71 மற்றும் இதர பொருந்தக்கூடிய விதிகள், ஏதேனும் இருந்தால், மற்றும் 2014ம் ஆண்டு கம்பெனிகள் (பிராஸ்பெக்டஸ் மற்றும் பத்திரங்கள் அளித்தல்) விதிகள் மற்றும் 2014ம் ஆண்டு கம்பெனிகள் (பங்கு மூலதனம் மற்றும் கடன் பத்திரங்கள்) விதிகளின்கீழ் ஏப்ரல் 1, 2019 முதல் மார்ச் 31, 2020 வரையிலான காலத்தில் ரூ.12,000 கோடி தொகைக்கு கடன் பத்திரங்கள் தனியாருக்கு தனிப்பட்ட முறையில் வழங்குவதற்கான சிறப்பு தீர்மானம்".

"2013 கம்பெனிகள் சட்டம் பிரிவுகள் 149, 152ன் கீழ் மற்றும் இதர பொருந்தக்கூடிய ஒதுக்கீடுகள் படியும், கம்பெனியின் சுதந்திரமாக இயங்கும் டைரக்டர்களாக மேலும் ஐந்து (5) ஆண்டு காலத்துக்கு திரு.பி.என்.வெங்கடாச்சலம், திரு.எஸ்.பிரசாத், Ms.ஷோபனா ராமச்சந்திரன் மற்றும் திரு. எஸ். மகாலிங்கம் ஆகியவர்களை மீண்டும் நியமிக்க சிறப்பு தீர்மானம்".

"2013 கம்பெனிகள் சட்டம் பிரிவுகள் 196, 197 மற்றும் 203ன் கீழ் மற்றும் இதற்கேற்ற ஷெட்யூல் V-க்கு ஏற்ப 31 மார்ச் 2024 வரைக்கான காலத்துக்கு திரு.ஏ.என்.ராஜு அவர்களை மீண்டும் டைரக்டராக (செயல்பாடு) நியமிக்க சாதாரண தீர்மானம்".

நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் / சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் ஆகியவற்றால் பராமரிக்கப்படும் பதிவேடு மற்றும் உறுப்பினர்களின் பதிவேடு ஆகியவற்றில் வெள்ளிக்கிழமை, பிப்ரவரி 8, 2019 அன்று வர்த்தக நேரம் முடிவில் உள்ள அங்கத்தினர்களுக்கு, பிப்ரவரி 18, 2019 அன்று மின்னஞ்சல் மூலமாகவோ / கூரியர் மூலமாகவோ, அஞ்சல் வாக்கு அறிவிப்பு மற்றும் அஞ்சல் வாக்குப்படிவத்தை (நிறுவனத்தின் முகவரியிட்ட முன் கட்டணம் செலுத்திய பதில் அஞ்சல் உறையுடன் சேர்த்து) நிறுவனம் அனுப்பியுள்ளது.

வாக்குப்பதிவு (அஞ்சல் மற்றும் மின்னணு முறையில் வாக்குப்பதிவு) செவ்வாய்க்கிழமை பிப்ரவரி 19, 2019 அன்று இந்திய நேரம் காலை 9 மணிக்குத் துவங்கி புதன்கிழமை மார்ச் 20, 2019 இந்திய நேரம் மாலை 5 மணிக்கு முடிவடையும்.

உறுப்பினர்களிடமிருந்து மேலே கூறப்பட்ட தேதிக்குப் பின் பெறப்படும் அஞ்சல் வாக்குப் படிவம் மூலம் வாக்களித்தல்/மின்னணு மூலம் வாக்களித்தல் ஆகியவை அனுமதிக்கப்படமாட்டாது.

அஞ்சல் வாக்குப் படிவம் கிடைக்கப் பெறாத உறுப்பினர்கள் கம்பெனியின் பதிவு அலுவலகம், 21, பட்டுல்லாஸ் சாலை, சென்னை - 600 002-ல் விண்ணப்பம் செய்து படிவத்தின் நகலை பெற்றுக் கொள்ளலாம்.

நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு திரு. டி.கே.பாஸ்கர், பார்ட்னர், HSB பார்ட்னர்ஸ், வழக்கறிஞர்கள், சென்னை, அவர்களை அஞ்சல் தேர்தலை நேர்மையாகவும், ஒளிவு மறைவின்றியும் நடத்துவதற்கு ஆய்வாளராக அமர்த்தியுள்ளது.

அஞ்சல் வாக்கு படிவத்தினை தபால் மூலம் அனுப்புவதற்கு பதில் மின்வாக்கெடுப்பு மூலம் வாக்களிக்க விரும்பும் உறுப்பினர்கள் வசதிக்காக சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL) மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அஞ்சல் வாக்கெடுப்பு பற்றிய அறிவிப்பு கம்பெனியின் இணையதளத்திலும் CDSL நிறுவனத்தின் இணையதளம் www.evotingindia.com-லும் புதன்கிழமை மார்ச் 20, 2019 வரை கிடைக்கும்.

அஞ்சல் வாக்கெடுப்பு படிவம் மற்றும் மின் வாக்குப்பதிவு ஆகியவற்றின் மீது சந்தேகம் மற்றும் குறைகள் இருந்தால் அவற்றை கம்பெனியின் செயலாளர் மற்றும் கம்ப்ளையன்ஸ் அதிகாரி திரு. பி. விஸ்வநாதன் அவர்களிடம் சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட், 21, பட்டுல்லாஸ் சாலை, சென்னை - 600002 என்ற முகவரியில் தெரிவிக்கலாம். தொலைபேசி எண் +91 044 2888 1207; தொலை நகல் எண்: +91 044 28556180; மின்னஞ்சல் : investorservices@sundaramfinance.in.

மின்னஞ்சல் மூலம் வாக்களிப்போர் தங்கள் சந்தேகம் மற்றும் குறைகளை helpdesk.evoting@cdslindia.com, மற்றும் தொலைபேசி எண் : 18002005533ல் தெரிவிக்கலாம்.

மேலும் விவரங்கள் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ்சின் இணையதளம் (www.nseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.sundaramfinance.in) ஆகியவற்றில் கிடைக்கும்.

சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட்டுக்காக
பி. விஸ்வநாதன்
செயலாளர் மற்றும் கம்ப்ளையன்ஸ் அதிகாரி

சென்னை
பிப்ரவரி 19, 2019

## சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட்

CIN: L65191TN1954PLC002429
பதிவு பெற்ற அலுவலகம் : 21, பட்டுல்லாஸ் சாலை, சென்னை 600 002.
Tel: 044 2852 1181, Fax: 044 2858 6641
www.sundaramfinance.in
Email: investorservices@sundaramfinance.in